திராவிட மாடல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களைத்தேடி ஆய்வகச் சேவைமூலம் பயனடைந்த பொதுமக்கள் எத்தனை பேர் மற்றும் அந்தத் திட்டத்தின் மூலமாக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் நிதி ஆதாரத்தின்கீழ், ஆய்வக வேதிப்பொருட்கள் மற்றும் நுகர்பொருட்களுக்கு 126 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. கூடுதலாக ஆய்வக நுகர்பொருட்களின் விநியோக நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், Passbook அமைப்பு செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நோக்கத்திற்காக ஒவ்வொரு சுகாதார அலகு, மாவட்ட நிலை, மாவட்ட தலைமை மருத்துவமனை நிலை, மாவட்டக் கல்லூரி மருத்துவமனை நிலை என்ற கணக்கில் 118 Walk-in குளிரூட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தின் செயல்பாட்டைச் செயலி ஒன்றின்மூலம் திறம்படக் கண்காணிக்கப்படுவது இச்சேவையின் மிகச் சிறப்பான அம்சமாகும். 2,427 spoke ஆய்வகங்கள், 755 hub எனப்படும் உயர்நிலை ஆய்வகங்களோடு இணைக்கப்பட்டு செயல்படும் இத்திட்டத்தில் 216 ஆய்வகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 5-2-2024 முதல் 22-6-2024 வரை 2 இலட்சத்து 57 ஆயிரத்து 493 ஆய்வகப் பரிசோதனைகள், 1,976 பணியாளர்களின் அர்ப்பணிப்புகளுடன்கூடிய சேவைமூலம் வெற்றிநடை போடுகிறது. இந்திய அளவில் சுகாதாரத் துறையின்கீழ் பணியாற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களைக்கொண்டு, இத்தகைய ஒரு திட்டத்தினைச் செயல்படுத்தும் ஒரே மாநிலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறும் தமிழகம் என்பதே பெருமைக்குரிய ஒன்று என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய விடையைக் காணிக்கையாக்குகிறேன்.

2024 ஜூன் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பான திட்டத்தின்கீழ், நாட்டு மக்களோடு நானும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 88, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

தங்கும் விடுதி

***12157—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், ஆதிதிருவரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்குத் தங்கும் விடுதிக் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற திருக்கோயில் என்பது அரங்கநாதனின் மச்சாவதாரம் கொண்ட முதல் திருக்கோயில். இந்தத் திருக்கோயிலுக்கு ரூ.10 கோடி செலவிலே திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பக்தர்கள் தங்கும் விடுதி 86.50 இலட்சம் ரூபாய் செலவில் பணிகளை மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, வருகின்ற 16–7–2024 அன்று திறக்கப்படவிருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு, பணி இறுதி செய்யப்பட்ட பிறகு அடுத்த மாத இறுதிக்குள் அந்த பக்தர்கள் தங்கும் விடுதிக்கு அவர்களே சிறப்பு பூஜை

செய்து, பணிகளைத் தொடங்கிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தளபதி அவர்களின் தலைமையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, 17 திருக்கோயில்களில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்காக, ரூ.70 கோடி செலவில் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்மிகப் பெருமக்கள் பயன்பெறும் வகையில் தங்கும் விடுதி அமைக்க ஒப்புதல் அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டுகளில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சுமார் 45 கோடி ரூபாய் செலவில் எண்ணற்ற கோயில்களுக்குக் குடமுழுக்கு, புதிய தேர் என திருப்பணிகளைச் செய்து கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி வட்டம், வரஞ்சரம் ஊராட்சியிலுள்ள பசுபதீஸ்வரர் கோயில் மிகவும் பழமைவாய்ந்த கோயில். இத்திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புதல் தருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பசுபதீஸ்வரர் திருக்கோயிலுக்கு 1992 ஆம் ஆண்டு கடைசியாகக் குடமுழுக்கு நடைபெற்றது. இந்த ஆண்டு அதை ஆயிரம் ஆண்டு பழமையான திருக்கோயில் பட்டியலில் இணைத்து, அதற்குண்டான தொல்லியல் துறை, மண்டலக் குழு, மாநில வல்லுநர் குழு ஒப்புதல் பெறப்பட்டிருக்கின்றது. மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, எவ்வளவு